JUDICIAL FORM NO.53
{See Rule-42}
DEPOSITION OF WITNESS
(CHATPTER XXIII CRPC).
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.
Case No.சிசி.956/2024
PW.4

| | | | |
|---|---|---|---|
| பெயர் | முருகன் | தாலுகா | தென்காசி |
| தந்தை பெயர் | அருணாச்சலம் | தொழில் | விவசாயம் |
| கிராமம் | மாதாபுரம் | வயது | 45 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Thursday 04.06.2026

(எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

முதல் விசாரணை:–

நான் தற்போது மாதாபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். அசா.3 ஜெயராஜ் என்பவரை எனக்கு தெரியும். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். தேதி,மாதம் நினைவில் இல்லை. கடந்த 12 வருடங்களுக்கு முன்பு நானும், ஜெயராஜீம் என்னுடைய தோட்டத்திற்கு சென்ற போது போலிசார் ராமநதி டேம் போகிற ரோட்டில் வைத்து என்னிடம் கையொப்பம் கேட்டார்கள். நான் செய்து கொடுத்தேன். இந்த வழக்கை பற்றி எனக்கு எதுவும் தெரியாது. பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் மட்டும் அசாஆ 3 ஆக குறியிடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தனர்

<u>அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டு பிறழ்சாட்சியாக விசாரிக்கப்பட்டது.</u>

போலிசார் விசாரணையின் போது கடந்த 31.01.2014ம் தேதி 06.00 மணிக்கு நானும், அசா.3 ஜெயராஜ் என்பவரும் வழக்கின் சம்பவ இடம் அருகே நின்று கொண்டிருந்தபோது அங்கு வந்த கடையம் காவல்ஆய்வாளர் கடையம் காவல்நிலைய குற்ற எண் 26/2014 வழக்கின் சம்பவ இடத்தையும், அதன் சுற்றுப்புறத்தையும் பார்வையிட்டு பார்வை மகஜர், மாதிரிவரைபடம் தயார் செய்தார்கள் என்றும், அதில் நானும், சாட்சி ஜெயராஜீம் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம் என்று போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது ஆஜர் எதிரிகளை

இவ்வழக்கிலிருந்து விடுவிக்க பொய்யாக சாட்சியாக அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//- Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi

JUDICIAL FORM NO.53
{See Rule-42}
DEPOSITION OF WITNESS
(CHATPTER XXIII CRPC).
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.
Case No.சிசி.956/2024
PW.3

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஜெயராஜ் | தாலுகா | தென்காசி |
| தந்தை பெயர் | ராஜமணி | தொழில் | விவசாயம் |
| கிராமம் | மாதாபுரம் | வயது | 47 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Thursday 04.06.2026

(எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

முதல் விசாரணை:–

நான் தற்போது மாதாபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். சாட்சி முருகன் என்பவரை எனக்கு தெரியும். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். தேதி,மாதம் நினைவில் இல்லை. கடந்த 10,12 வருடங்களுக்கு முன்பு நான் என்னுடைய தோட்டத்திற்கு சென்ற போது போலிசார் ராமநதி டேம் போகிற ரோட்டில் வைத்து என்னிடம் கையொப்பம் கேட்டார்கள். நான் செய்து கொடுத்தேன். இந்த வழக்கை பற்றி எனக்கு எதுவும் தெரியாது. பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் மட்டும் அசாஆ 2 ஆக குறியிடு செய்யப்படுகிறது. போலிசார் என்னிடம் பெயரை மட்டும் கேட்டனர். நான் எதற்காக என்று கேட்டதற்கு போலிசார் தாங்கள் வந்ததற்காக கையொப்பம் கேட்டார்கள்.

<u>அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டு பிறழ்சாட்சியாக விசாரிக்கப்பட்டது.</u>

போலிசார் விசாரணையின் போது கடந்த 31.01.2014ம் தேதி 06.00 மணிக்கு நானும், சாட்சி முருகன் என்பவரும் வழக்கின் சம்பவ இடம் அருகே நின்று கொண்டிருந்தபோது அங்கு வந்த கடையம் காவல்ஆய்வாளர் கடையம் காவல்நிலைய குற்ற எண் 26/2014 வழக்கின் சம்பவ இடத்தையும், அதன் சுற்றுப்புறத்தையும் பார்வையிட்டு பார்வை மகஜர், மாதிரிவரைபடம் தயார் செய்தார்கள் என்றும், அதில் நானும், சாட்சி

முருகனும் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம் என்று போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது ஆஜர் எதிரிகளை இவ்வழக்கிலிருந்து விடுவிக்க பொய்யாக சாட்சியாக அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//– Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi